இரண்டாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 23.04.2025

O.S. 94/2020

வா.சா.1 - பிறைசூடும் பெருமாள்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

எனது மனைவி அதிகாரம் தந்து நான் இவ்வாக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று குறுக்குவிசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றம் என் மனைவி இவ்வழக்கை தாக்கல் செய்வதற்க்கு என்ன அதிகாரம் இருக்கிறதென்றால் குத்தகை ரசீது எனது மனைவியின் பெயரில் உள்ளது அதன் அடிப்படையில் தாக்கல் செய்கிறேன். நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள ஏதேனும் ஆவணங்களில் மனைவி குத்தகைதாரர் என்பதை காட்டுவதாக இருக்கிறதென்றால் இருக்கிறது. அதை குறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல்செய்துள்ளீரர என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 1 முதல் 4 அனைத்தும் சிதம்பரவடிவு அம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். சிதம்பரவடிவு அம்மாளுக்கு வேண்டி ரசீதுகள் கட்டியதாக உள்ளது என்றால் சரிதான். சிதம்பர வடிவு அம்மாள் காலத்திற்க்கு பிறகு எனது மனைவியின் தகப்பானரர் காசிவிஸ்வநாதர்க்கு கீழ் குத்தகை கொடுக்கப்பட்டதாக முதல்விசாரணையிலும், வழக்குரையிலும் சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் கீழ்குத்தகை கிடையாது.

2, கீழ்குத்தகை கிடையாதுஎன்பதால் எனது மனைவியின் தகப்பானரர் காசிவிஸ்வநாதர்க்கு கீழ் குத்தகை கொடுக்கப்பட்டதாக முதல்விசாரணையிலும், வழக்குரையிலும் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. காசிவிஸ்வநாதா் செலுத்தியதாக சொல்லக்கூடிய குத்தகை கட்டணம் சிதம்பர வடிவு அம்மாளுக்கு வேண்டி செலுத்தியாதாக உள்ளதை தவிர காசிவிஸ்வநாதர் கீழ் குத்தகைக்காக செலுத்தியதாக

உள்ளது என்றால் சரிதான். அவ்வாறுதான் ரசீது போடுவார்கள். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 2016ம் ஆண்டு வரை நாங்கள் குத்தகை செலுத்தியுள்ளோம் என்று முதல்விசாரணையிலும், வழக்குரையிலும்சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. 2016ம் ஆண்டு வரை சுசீந்திரம் அலுவலகத்தில் கட்டணம் கட்டியுள்ளோம் ஆனால் ரசீது தரவில்லை என்று முதல்விசாரணையிலும், வழக்குரையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 முதல் 4 ன் 2016ம் ஆண்டுவரை சுசீந்திரம் அலுவலகத்தில் கட்டணம் கட்டியுள்ளதற்கான ஆவணம் இல்லை என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு வரை சுசீந்திரம் அலுவலகத்தில் கட்டணம் கட்டியுள்ளோம் ஆனால் ரசீது தரவில்லை என்று முதல்விசாரணையிலும், வழக்குரையிலும் சொல்லியுள்ளேன் அதுசம்பந்தமாக புகார் எதுவும் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தோம் அதை அவர் வாங்கவில்லை . யாரிடம் கொடுத்தீர்கள் என்றால் மீனாட்சி நாதன் ஆதினத்தின் மாவட்ட அதிகாரியிடம் கொடுத்தோம். அவ்வாறு புகார் கொடுத்தற்கான ஆவணம் உ்ளளது நீதிமன்றத்தில் தாக்கல்செய்யலாம் என்றால் சரிதான்.

4, வழக்கில் இருக்கின்ற 2 பட்டிகை சொத்திற்க்கும் ஒவ்வெரு கிராப்புக்கும் குத்தகை பாட்டம் கட்டணம் எவ்வளவு என்றால் 1 பூக்கு 4 கோட்டை இரண்டு பூக்கு ஒரு வருடத்திற்க்கு 8 கோட்டை ரூ. 8,000/- என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து ஐட்டம் நம்பர் 1 மற்றும் 2 க்கு எவ்வளவு பாட்டம் என்ற தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ 1 முதல் 4 ன் ஆவணங்களில் 1 பூவிற்க்கு 4 கோட்டம் நெல்வைத்து கட்டியதாக ரசீது இருக்கிறது என்றால் இருக்கிறது. அதனை பிரித்துபிரித்து கொடுப்போம். அவ்வாறு பிரித்து பிரித்து கொடுத்தால்கூட இவ்வளவு பூவிற்க்கு இவ்வளவு பாட்டம் என்று குறிப்பிட்டிருக்கும்

என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வழக்குரை பாரா 11 ல் 03.06.2020 ல் ரூ.8000/-க்கு D.D எடுத்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் அது எந்த வருடம ்அனுப்பியது என்றால் தற்போது ஞாபகமில்லை. D.D கட்டணம் ரூ.8000/- நான்கு வருடத்திற்கான பாட்டம் கட்டணம் என்று நான் சொல்லியுள்ளது சரியா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ 1 ன் ரசீது எண்.1 ல் சிதம்பர வடிவு அம்மாள் வகைக்கு காசிவிஸ்வநாதர் என்று எழுதி அந்த ரசீதின் கீழே செலுத்தவர் ஒப்பம் காசிவிஸ்வநாதர் என்று கையோப்பம் இடப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ன் ரசீது எண்.2 17.10.1999 தேதியிட்டதில் அதில் செலுத்துவரின் ஒப்பம் எனது மனைவியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ன் ரசீது எண்.2 17.10.1999 தேதியிட்டதில் அதில் செலுத்துவரின் ஒப்பம் எனது மனைவியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் குத்தகை செலுத்தியவருக்கு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. 17.10.1999 அன்றே வழக்கு பட்டிகை சொத்தில் எனது மனைவிக்கு எந்தஉரிமையும் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ன் ரசீது எண் 5,10.2002 தேதியிட்ட ரசீதில் சிதம்பர வடிவு அம்மாள் வகைக்கு காசிவிஸ்வநாதர் என்று செலுத்துபவர் ஒப்பம் யார் போட்டது என்றால் தெரியவில்லை. வா.சா. ஆ 1 ன் எந்த ரசீதிலும் 1 பூக்கு 4 கோட்டை நெல் கட்டியதாக இல்லையென்றால் சரிதான். வா.சா. ஆ 2 ல் 08.03.2003 தேதியிட்ட ரசீதில் செலுத்துபவர் ஒப்பம் யார் என்றால் எனது மனைவியின் தாயார் சுப்பம்மாள். காசிவிஸ்வநாதர் மற்றும் எனது மனைவியின் தாயார் இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள எனது மனவைியின் தாயாரின் இறப்பு சான்றிதழில் தாயாரின் பெயர் பாப்பா என்று உள்ளது என்றால் சரிதான். பாப்பா என்ற

சுப்பம்மாள் ஆகும். பாப்பா என்பதும் சுப்பம்மாள் என்பதும் ஒரே நபர் என்பவர் தான் காட்டுவதற்காக ஆவணங்,கள் எதுவும் தாக்கல் செய்யமுடியமா என்றால் முடியும்.

7. வா.சா.ஆ 2ல் கையொப்பமிட்ட சுப்பமம்மாள் என்பவருக்கும் எனக்கும் எனது மனைவிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பாப்பா என்ற சுப்பம்மாள் என்பவர் தான் எனது மனைவியின் தாயார் என்பதில் காட்டுவதற்காக நீதிமனற்த்தில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யபில்லை என்றால் சரியல்ல. வா.சா. ஆ 3 ல் 07.10.2005 தேதியிட்ட ரசீதில் செலுத்துபவர் கையொப்பம் யார் கைபொய்யப்பம் இட்டது என்றால் எனது மனைவி கையொப்பமிட்டது. எனது மனைவி எனக்கு சிறப்பு அதிகாரம் தந்ததாக வா.சா.ஆ 9 தாக்கல் செய்யப்பட்டது அதில் சிறப்பு அதிகாரம் கொடுத்த நபர் என்ற கையொப்பம் யார் கையொப்பம் இட்டது என்றால் எனது மனைவிதான். வா.சா. ஆ 9 ல் உள்ள கையெழுத்தும் வா.சா.ஆ 3 ல் 07.10.2005 தேதியிட்ட ரசீதில் உள்ள கையெழுத்தும் வெவ்வேறு கையெழுத்து என்றால் சரியல்ல.

8. வா.சா. ஆ 3 ல் 13.03.2008 தேதியிட்ட ரசீதில் சிதம்பரவடீவு அம்மாள் வகைக்கு K.S. சுஜா என்று எழுதப்பட்டது என்றால் சரிதான். K.S. சுஜா என்பவர் கூடுதலாக எழுதி சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3ல் 10.06.2010 ட தேதியிட்ட ரசீதில் செலுத்துபவர் கையொப்பம் யாருடையது என்றால் தெரியாது.வா.சா.ஆ 3ல் 02.06.2011 தேதியிட்ட ரசீதில் செலுத்துபவர் கையொப்பம் யாருடையது என்றால் தெரியாது. வா.சா.ஆ 4 ல் ரசீது 17.10.2008 தேதியிட்ட ரசீதில் செலுத்துபவர் கையொப்பம் யாருடையது என்றால் எனது அப்பாவினுடையது. எனது அப்பாவிற்க்கும் வழக்கு பட்டிகை சொத்திற்க்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

9. 13.03.2007 தேதியிட்ட ரசீதில் செலுத்துபவர் கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது. எனக்கும் வழக்குபட்டிகை சொத்திற்க்கும் சம்பந்தமுள்ளதா என்றால்

எனது மனைவிக்காக வேண்டி செலுத்தியது. 13.03.2007 தேதியிட்ட ரசீதில் எனது மனைவிக்காக வேண்டி செலுத்தியது என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. 20.12.2010 ரசீதில் செலுத்துபவர் கையொப்பம் யாருடையது என்றால் தெரியாது. எனது மனைவிக்கோ, எனது மனைவியின் தாயருக்கோ, எனது மனைவியின் தகப்பானருக்கோ வழக்கு பட்டிகை சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. வழக்கு பட்டிகை சொத்தில் சிதம்பர வடிவு அம்மாளிடமிருந்து காசிவிஸ்வநாதர் கீழ் குத்தகைக்கு எடுத்து கீழ் குத்தகைதாரரின் அடிப்படையில் அனுபவித்து வந்தது என்று சொல்வது என்றால் பொய் என்றால் சரியல்ல. வழக்குரையில் ஆதினத்தின் அனுமதியுடன் கீழ் குத்தகை கொடுக்கப்பட்டது என்பதை காட்டுவதற்க்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல..

10. ரசீதுகள் உள்ளது. வா.சா. ஆ 5 ல் நான் திருவாடுதுரை ஆதின கர்தருக்கு அனுப்பியதாக ஒரு கடித நகல் தாக்கல் செய்துள்ளேன். அதில் பாரா 4 ல் காசிவிஸ்வநாதரின் வாரிசுகளான சுஜா மற்றும் உஷா ஆகிய இருவர்களின் சுஜா பாட்ட அவகாச கைவச அனுபவம் இந்த இரு சொத்துக்களுக்கும் பெற்று இரு போக நிலங்களையும் கைவசம் வைத்து அனுபவித்து வருவதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா செய்யமுடியுமா என்றால் முடியாது. வா.சா. ஆ 5 ல் பாரா 4 ல் 2016 ம் ஆண்டு வரை சிதம்பர வடிவு அம்மாள் பெயரில் நான் பாட்டம் செலுத்தியுள்ளேன் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

11. வா.சா-ஆ 7 ல் வடசேரி காவல்நிலையம் ஆய்வாளருக்குபுகார் கொடுத்ததாக சொல்லி அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தள்ளேன். அந்த புகாரில் சிதம்பர வடிவு அம்மாள் குத்தகைதாரரும் அவர் காசிவிஸ்வநாதர்க்கு கீழ் குத்தகை கொடுத்ததாகவும்

அதன் அடிப்படையில் நாங்கள் கீழ்குத்தகை என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்திற்க்கும் எனக்கோ எனது மனைவிக்கோ எனது மனைவியின் தாயாருக்கோ, எனது மனைதவியின் தகப்பானருக்கோ எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல..

12. வழக்கு பட்டிகை கீழ் குத்தகை தாரர்க கோருவது பொய் என்றால் சரியல்ல. . சிதம்பர வடிவு அம்மாள் எனது மனைவியின் உறவினர் என்று சொல்வது பொய் என்றாலர் சரியல்ல. திருவாடுதுரை ஆதினத்திற்க்கு உரிமைப்பட்ட சொத்தினை எங்களின் சொத்து என்று கோருவது தவறு என்றால் சரியல்ல. நாங்கள் அந்த சொத்தில் அனுபதவித்தில் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் என் மவைிக்கும் இவ்வழக்கில் எவ்வித நிவாரணமும் கோருவதற்க்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த பொய் வழக்கிற்க்கு காரணம் நான்தான் என்றால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கு பிரதிவாதி ஆதினத்தின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாணை முடிக்கப்படுகிறது.